## 29.25 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கான நடைமுறையை மாற்றியமைத்தல்

ஊரக வளர்ச்சி (மதி1)த்துறை

அரசாணை (நிலை) எண்.266 நாள் : 29.09.2000

படிக்க :

(1). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.50, நாள் 24.02.1997
(2). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.277, நாள் 10.09.1997
(3). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.30, நாள் 09.02.1999
(4). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.45, நாள் 09.03.1999
(5). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.79, நாள் 26.04.1999
(6). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (2டி) எண்.149, நாள் 09.07.1999
(7). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.126, நாள் 16.05.2000

**ஆணை**

ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.79, நாள் 26.04,1999–ல் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு மதிப்பூதியம் பெற்று வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டது எனினும், ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண். 126, நாள் 16.05.2000–ல் கிராம ஊராட்சியில் பணிபுரியும் மக்கள் நலப்பணியாளர்களுக்கு ஊராட்சித் தலைவர்கள் மதிப்பூதியத்தை வழங்கலாம் என்று மாற்றி ஆணை இடப்பட்டது. இந்த நடைமுறையில் சில நிர்வாக சிக்கல்கள் ஏற்பட்டதை அரசு கவனமாக ஆராய்ந்தது. அதன் அடிப்படையில் 26.04.1999–ல் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.79–ல் இருந்தது போல மக்கள் நலப்பணியாளர்களுக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மாதந்தோறும் மதிப்பூதியம் அளிக்க இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரேமஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்